# காஞ்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!













காஞ்சிபுரம் – பச்சையப்பன் ஆடவர் கல்லூரி விளையாட்டுத் திடலில், நேற்று காலை, ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை’ தொடங்கி வைக்க வருகைத் தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, விழாவில் பங்கேற்ற மகளிர், அகம் குளிர, மனம் மகிழ வரவேற்ற வாஞ்சை மிகு காட்சிகள்!


### கலைஞர் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு

## கிராமங்கள்தோறும் தி.மு.க. கொடியேற்றுவது பெருமையாக உள்ளது!

### என்.பஞ்சம்பட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

ஆத்தூர், செப். 16 -

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிராமங்கள் தோறும் தி.மு.க. கொடியேற்றுவது பெருமையாக உள்ளது என்றும் திமுகவை தொடங்கிய அண்ணாவின் பிறந்த நாளில் தமிழகத்தில் உள்ள இல்லதரசிகளுக்கு திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கும் ரூபாய் ஆயிரம் மகளிர் உரிமைத் தொகை மூலம் விடிவு காலம் பிறக்கிறது என என்.பஞ்சம்பட்டியில் நடைபெற்ற தி.மு.க. கொடியேற்று விழாவில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் என்.பஞ்சம்பட்டியில் மறைந்த முன்னாள் முதல்வர் தமிழின காவலர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு பாஸ்கா மைதானம் முன்பு பிரம்மாண்ட மான தி.மு.க. கொடிக்கம்பத்தில் கொடியேற்றும் விழா நடைபெற்றது. விழாவிற்கு ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளை யார் நத்தம் முருகேசன் தலைமை தாங்கினார். ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஊராட்சிமன்ற தலைவர் பாப்பாத்தி நாகராஜன், துணைத்தலைவர் ஜோசப், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மருதாம்பால் ஆல்பர்ட் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் மெல்வின் வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியில் பிரம்மாண்டமான கொடிக்கம்பத்தில் தி.மு.க. கொடியேற்றிவிட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கிவிட்டு பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதிய கொடிக்கம்பங்களில் தி.மு.க. கொடியேற்றுவது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. என்.பஞ்சம்பட்டி கிராமத்தில் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் என்னற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம். அறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட தி.மு.கழகம் இன்று இந்திய அளவில் பெருமைப்படக்கூடிய இயக்கமாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக அவருடைய பிறந்தநாளான செப்டம்பர் 15ம் தேதி திராவிடமாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிருக்கு வழங்க உள்ள கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை பெண் சமுதாயத்தை முன்னேற்றும் இது உறுதி என்றார். குறிப்பாக தகுதியுள்ள அனைவருக்கும் உரிமைத்தொகை வழங்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். விடுபட்ட நபர்களுக்கும் உரிமைத்தொகை வழங்கப்படும் யாரும் வருத்தப்பட வேண்டாம் என்றதோடு விடுபட்டவர்கள் அதற்குரிய காரணங்களை நீக்கிவிட்டு அவர்களும் மகளிர் உரிமைத்தொகை பெறலாம் என்றார். என்.பஞ்சம்பட்டி கிராமத்தில் திமுக நிர்வாகிகள் ஒற்றுமையுடன் செயல்படுவது மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பதோடு வரும் பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு அதிக வாக்குகள் பெறும் கிராமமாக என்.பஞ்சம்பட்டி உள்ளது என்றார். நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி,

ஒன்றிய துணைச் செயலாளர் வசந்தா கென்னடி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தம்பா செல்வகுமார், திமுக நிர்வாகி டாஸ்மாக் வடிவேலு, முன்னாள் ஒன்றிய அவைத்தலைவர் வீரையா, என்.பஞ்சம்பட்டி முன்னாள் கிளைச்செயலாளர்கள் ராஜாமணி, ராபின், ரெமி ஜோசப், முன்னிலை கோட்டை புலிப்பாண்டி, உட்பட தி.மு.க. நிர்வாகி கள் பலர் கலந்துகொண்டனர்.

நிறைவாக அரசு ஒப்பந்தகாரர் ஜீசஸ் அகஸ்டின் நன்றி கூறினார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின்115வது பிறந்தநாளை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டக் கழகத்தின் சார்பில் துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் இ. பெரியசாமி திண்டுக்கல்லில் அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் ,பாராளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி மற்றும் கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

## திராவிட இயக்க வரலாற்றில் இந்த நாள் பொறிக்கப்படும்!

### கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!



பேரறிஞர் அண்ணாவின்
பிறந்த நாளில்
பிறந்த மண்ணில்
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்
தொடங்கி வைக்கும்
கலைஞர் மகளிர்
உரிமைத் தொகைத் திட்டம்
தாய்க்குலத்தின்
சுதந்திரத்திற்கும்
சுயமரியாதைக்கும்
பக்கபலமிருந்து
தக்கபயன் நல்குவதாகும்

திராவிட இயக்க வரலாற்றில்
இந்த நாள்
குறிக்கப்படுவது மட்டுமல்ல
பொறிக்கப்படும்

இந்தியாவின்
பிற மாநிலங்களும்
தளபதி ஏற்றி வைக்கும்
இந்தத் திருவிளக்கில்
தீபமேற்றிக் கொள்ளலாம்.



- கவிப்பேரரசு வைரமுத்து